# வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2015

# 2015/02

**இடம்** : வட மாகாண சபையின் குழுக் கூட்ட அறை

**காலம்** :- 16.04.2015 காலை 09.30 மணி

**சமுகமளித்தோர்:-**

- கௌரவ கல்வி அமைச்சர் திரு.த.குருகுலராசா
- கௌரவ திரு.சி.தவராசா – எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு மாகாண சபை.
- கௌரவ திரு.ம.அன்ரனி ஜெயநாதன் – பிரதி அவைத் தலைவர், வட மாகாண சபை.
- கௌரவ திரு.பா.கஜதீபன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- கௌரவ திரு.ஆ.சி.து.ரவிகரன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- கௌரவ திரு.ப.அரியரத்தினம் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ திரு.அ.பரஞ்சோதி – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ திருமதி.அனந்தி சசிதரன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- திரு.சி.சத்தியசீலன் – செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- திரு.எஸ்.உதயகுமார் – மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்.
- திருமதி.வனஜா செல்வரட்ணம் – பணிப்பாளர், கலாசார பண்பாட்டுத் திணைக்களம்.
- எந்திரி.தே.சுரேஸ்குமார்,பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- எந்திரி.எஸ்.விகிர்தன், பாடசாலை வேலைகள் பொறியியலாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- திரு.ஆ.க.சண்முகநாதன் – கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்.
- திரு.மா.தேவேந்திரன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்), மா.க.அமைச்சு

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் காலை வணக்கத்தினை தெரிவித்து புதிதாக பதவியினைப் பொறுப்பேற்றுக்கொண்ட மாகாணக் கல்விப் பணிப்பாளர், கலாசாரப் பணிப்பாளரை வரவேற்று கூட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

சென்ற கூட்ட அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

- **விளையாட்டு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு தொடர்பானது.**

  விளையாட்டு உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (MSD) அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்த பின்பு வெற்றிடங்கள் நிரப்புதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

- **யா/ஒஸ்மானியா கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பானது.**

  யா/ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இரண்டு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.ஒருவருடைய விண்ணப்பம் தகமை போதாமையால் நிராகரிக்கப்பட்டது. மற்றையவர் பொருத்தமானவரா என்பதை ஆராய்ந்து நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- **அதிபர் சேவை இடமாற்றம் தொடர்பானது.**

  பதவியுயர்வு கிடைத்த அதிபர்களுக்கு பொருத்தமான பாடசாலைகளை வழங்குவதற்கு ஏதுவாக வலயக் கல்விப் பணிப்பாளர்ளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் வலயங்களில் ஒரு குழுவினை அமைத்து அவர்களின் ஆலோசனைக்கமைய இடமாற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் நேரில் சென்று வலயக் கல்விப் பணிப்பாளரின் திட்டத்திற்கமைய அதிபர்களை நேர்முகத்தேர்விற்கு உட்படுத்தி இடமாற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். போர் காரணமாக வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்ற முடியாத காரணத்தினால் அதிபர்கள் பதவியுயர்வு கிடைக்கப்பெறாது பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்ததாக கூறியதாக கூறப்பட்டது.

- **தீவக கல்வி வலயத்தில் சேவைக் காலத்தை முடித்தவர்களின் இடமாற்றம் தொடர்பானது.**

  தீவக கல்வி வலயத்தில் சேவைக்காலத்தினை பூர்த்தி செய்த ஆசிரியர்களிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பதிலீடு கிடைக்கப்பெற்றதும் மிகுதியாக உள்ளவர்களிற்கும் இடமாற்றம் வழங்கப்படும்.

- **பதுளை மாவட்ட கொஸ்லாந்தை மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி வழங்கல் தொடர்பானது.**

  பதுளை மாவட்டத்தில் மண்சரிவினால் ஒன்பது மாணவர்கள் தாய் தந்தையரை இழந்துள்ளனர். அவர்களிற்கு வடக்கு மாகாணத்தில் மாணவர்கள் ஊடாக சேகரிக்கப்பட்ட நிதியினை பகிர்ந்து அவரவர் பெயரில் வங்கிகளில் நிலையான வைப்புக்களில் இடப்பட்டுள்ளது. வட்டி சேமிப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. அதனை அவர்கள் பயன்படுத்த முடியும். இதற்கு ஒரு நிகழ்வினை ஒழுங்கு செய்து வைபவ ரீதியாக அவர்களிற்கு கையளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

- **தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பானது.**

  தொண்டராசிரியர்களை பாடசாலைகளில் தொடர்ந்தும் வைத்திருக்கக் கூடாது என்று சுற்றுநிருபம் அனுப்பப்பட்டும் இற்றைவரையும் அவர்கள் கடமையாற்றுகின்றனர். இனி தொடர்ந்தும் பாடசாலைகளில் தொண்டராசிரியர்களை வைத்திருக்கக்கூடாது என கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் திரு.சி.தவராசா அவர்கள் கேட்டுக்கொண்டார். யுத்த காலங்களில் கடமையாற்றியவர்களை மனிதாபிமான ரீதியில் நிரந்தரமாக்கலாம்.

  தொண்டராசிரியர்களை இணைத்துக் கொள்வதன் மூலம் தரமான ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள முடியாது. மாணவர்களிற்கு ஆரம்பக் கல்வியில் தரமான கல்வியினை

வழங்குதல் வேண்டும். இது தொடர்பாக கௌரவ மத்திய கல்வி அமைச்சர் அவர்களிற்கு கடிதம் அனுப்புதல் வேண்டும்.

- **வ/விபுலானந்த கல்லூரி அதிபர் திரு.கந்தையா தனபாலசிங்கம் SLPS – I அவர்களது ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பானது**

  மேற்படி பாடசாலை அதிபர் வவுனியா தெற்கு வலயத்தில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார். அவர் இதுவரை கடமையைப் பொறுப்பேற்கவில்லை என சுட்டிக் காட்டப்பட்டது. இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக செயலாளர் உறுதியளித்தார்.

- **யா/கதீஜா பெண்கள் கல்லூரியை மீள ஆரம்பித்தல் தொடர்பானது.**

  யா/கதீஜா பெண்கள் கல்லூரி இரண்டாம் தவணை தொடக்கம் ஆரம்பிக்கப்படுகின்றது. யா/ஒஸ்மானியாக் கல்லூரியில் ஒரு பகுதியில் பிரித்து ஆரம்பிக்கலாம் எனத் தீர்மானிக்கபட்டது. இந்திய அரசின் உதவியுடன் யா/ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகில் யா/கதீஜா பெண்கள் கல்லூரி நிர்மாணிக்கப்படும்.

- **ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான தற்போதைய நிலைமை**

  வெளி மாவட்ட சேவையை நிறைவுசெய்த ஆசிரியர்களுக்கு தற்போது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் இடத்திற்கு வெளிமாவட்ட சேவை செய்யாத ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். தற்போது பட்டதாரி ஆசிரியர் நியமனம் புதிதாக வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் கணிசமான ஆசிரியர்கள் இதுவரை கடமையைப் பொறுப்பேற்கவில்லை. 14 நாட்களிற்குள் கடமையைப் பொறுப்பேற்காத பட்சத்தில் இரண்டாம்கட்ட பட்டியலில் உள்ளவர்களிற்கு நியமனம் வழங்கப்படும்.

- மு/கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலைக்கு அதிபர் ஒருவரை நியமனம் செய்தல் வேண்டும்.

  மு/தண்டுவான் அ.த.க. பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாமென பிரதேச மக்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள் – **கௌரவ ஆ.சி.து.ரவிகரன், மாகாண சபை உறுப்பினர்**

- யா/நெடுந்தீவு சரஸ்வதி வித்தியாலயத்திற்கு ஏழு வருடமாக விஞ்ஞான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாத காரணத்தினால் ஒரு பிள்ளையும் கணித, விஞ்ஞான பாடத்துறையை படிக்கக்கூடிய பெறுபேற்றை கொண்டிருக்கவில்லை –**கௌரவ திருமதி.அனந்தி சசிதரன், மாகாணசபை உறுப்பினர்.**

- கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை கணித ஆசிரியரை கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை பதிலீடு வழங்கப்படவில்லை. கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திற்கு இதுவரை விஞ்ஞான ஆசிரியர் நியமனம் செய்யப்படவில்லை.– **கௌரவ திரு.ப.அரியரத்தினம், மாகாணசபை உறுப்பினர்**

  கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திற்கு தற்போதைய இரண்டாம்கட்டப் பட்டியல் மூலம் புதிதாக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

- யா/தந்தை செல்வா தொடக்கநிலைப் பாடசாலையில் ஆசிரிய பற்றாக்குறை காணப்படுகின்றது. – **கௌரவ திரு.பா.கஜதீபன், மாகாணசபை உறுப்பினர்.**
  வலிகாம வலயத்தில் உள்ளக இடமாற்றம் மூலம் இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- **மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையை பெண்கள் வித்தியாலயமாக்குதல்.**

  மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையை பெண்கள் வித்தியாலயமாக்குதல் தொடர்பாக கூட்டம் ஒன்றினை கூட்டுவதற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும்.
- **யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.**
  மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் நேரில் சென்று பெற்றோருடன் கலந்துரையாடி இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும்.
- மன்/வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலையை க.பொ.த(சா/த) வரை ஆரம்பிக்க அனுமதித்தல் வேண்டும்– **கௌரவ திரு.அ.பரஞ்சோதி, மாகாணசபை உறுப்பினர்**
- **வ/காமினி மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக**
  ஒலித் தடை (Sound Barrier) ஒன்றினை பாடசாலைக்கும் பேருந்து நிலையத்திற்கும் இடையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் அனுப்புதல் வேண்டும்.
- மாகாணக் கொடியை சகல பாடசாலைகளுக்கும் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஏதாவது வைபவங்களிற்கு தேவையாயின் தற்போது வலயக் கல்வி அலுவலகத்தில் மாகாணக் கொடியைப் பெற்று பயன்படுத்த முடியும்
- வ/நெடுங்கேணி மகா வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவினை பிரித்தெடுத்து புதிய பாடசாலை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## கலாசாரம் தொடர்பானது

- **நல்லூர் மந்திரிமனை தொடர்பாக எமது பழைமையை பேணிப் பாதுகாத்தல் தொடர்பானது.**
  நல்லூர் மந்திரி மனையை பாதுகாத்தல் தொடர்பாக புதிதாக பொறுப்பேற்ற கலாசார பணிப்பாளரை நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ கல்வி அமைச்சர் கேட்டுக்கொண்டார். கௌரவ எதிரிக்கட்சித் தலைவருடனும் கௌரவ அவைத்தலைவருடனும் தொடர்புகொண்டு சட்டநாதர் கோவில் நிர்வாகத்துடன் கலந்துரையாடி வட மாகாணசபைக்கு ஐம்பது வருட குத்தகைக்கு எடுத்தல் வேண்டும்.

# 16.04.2015 ஆந் திகதிய கூட்டத் தீர்மானங்கள்

❖ **வடக்கு மாகாண கல்வி முறைமை மீளாய்வு, சிபாரிசுகள் அமுல்ப்படுத்தல்.**

**(RIMP), (LMDMU)**

வடக்கு மாகாண கல்வி முறைமை மீளாய்வு, சிபாரிசுகளை அமுல்ப்படுத்துவதற்காக ஒரு குழுவினை அமைத்து செயற்பட வேண்டும். இக் குழுவினை ஒரு வருடத்திற்கு ஒரு முறை மாற்றியமைக்க வேண்டும். இதற்கு ஒரு இணையத்தளத்தை ஆரம்பிக்க வேண்டுமென கௌரவ எதிர்க்கட்சித்தலைவர் திரு.சி.தவராசா கோரிக்கை வைத்தார். RIMP, LMDMU ஆகிய குழுக்களை அமைக்க ஆலோசனைக் குழுவின் அனுமதி தேவை என கௌரவ கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

❖ **2015 ஆம் ஆண்டுக்கான TSEP, PSDG,CBG ஆகிய நிதி ஒதுக்கீடுகளின் மீளாய்வு**

- PSDG திட்டத்திற்கு எம்மால் சிபாரிசு செய்யப்பட்பட்ட பாடசாலைகளை மாற்றியமைக்கப்பட்டு பகுதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள வேலைகளை முழுமையாக பூரணப்படுத்தவும் வடமராட்சி, தென்மராட்சி, முல்லைத்தீவு, மடு ஆகிய வலயங்களின் குறை வேலைகளை பூர்த்தி செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. விடுபட்ட பாடசாலைகளை அடுத்த வருட TSEP திட்டத்தினூடாக முன்னெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது. இந்த வருடம் ஆரம்பிக்கப்படும் வேலைகளை இந்த வருடமே முடிக்கக்கூடியவாறு திட்டமானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (மாற்றியமைக்கப்பட்ட பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)
- யா/இடைக்காடு மகா வித்தியாலயத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியானது வேலைகளை பூரணமாக முடிப்பதற்காக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.
- கிளிநொச்சி வலயம் அமைந்துள்ள காணியானது சிங்கள மகா வித்தியாலயத்திற்குரிய காணியென மாகாணசபை உறுப்பினர் கௌரவ திரு.ப.அரியரத்தினம் தெரிவித்தார். கேள்விப் பத்திர சேமிப்பு ( Tender Savings) கிடைத்தால் PSDG 2015 திட்டத்தில் விடுபட்ட பாடசாலை வேலைகளை முன்னுரிமை அடிப்படையில் செய்யப்படவுள்ளது என தீர்மானிக்கப்பட்டடது.
- TSEP திட்டத்தில் யா/சென்.பெனடிக்ற் பாடசாலைக்கு மூன்று மாடிக் கட்டடம் அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளி/பளை மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலையையும் இத் திட்டத்தினுள் உள்ளடக்குவதென தீர்மானிக்கப்பட்டது.
- CBG நிதி தொடர்பில் நிதிகளை பிரதேச செயலகத்திற்கு வழங்காது கல்வி அமைச்சே பொருட்களை கொள்வனவு செய்து வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. கோவில் திருத்தங்களிற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்து வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது. TSEP நிதி 2015 ஆம்

ஆண்டில் 273Mn ஒதுக்கப்பட்டுள்ளது ஆனால் 2014 ஆம் ஆண்டு வேலைகளிற்கான கொடுப்பனவு 100 Mn உம் மிகுதி 173 Mn இற்கு 2015 ஆம் ஆண்டு புதிய வேலைகள் செய்யப்படுகின்றது. இவற்றில் 10 பெரிய வேலைகளும் (5Mn இற்கு மேற்பட்ட வேலைகள்) 90 சிறிய வேலைகளும் (MRC) காணப்படுகின்றது. பத்து பெரிய வேலைகளுக்கான கேள்விகள்(Tenders) கோரப்பட்டுள்ளது. TSEP 2016 இற்கான வேலைகள் அடுத்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும்.

- **முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவுகள்**

  முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பவுகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். முன்பள்ளிகளை நடத்தும் நிறுவனத் தலைவர்களுடன் கலந்துரையாடி கொடுப்பனவு வழங்கும் முறைமையை தேவைப்பட்டால் மாற்றியமைத்து தாமதம் இன்றி கொடுப்பனவுகள் கிடைக்ககூடிய விதத்தில் மாற்றியமைக்க வேண்டும்.

- **வடக்கு மாகாண பாடசாலைகளின் நிலத்தள வரை படங்களைத் தயாரித்தல்.(Ground Plan)**

  வடக்கு மாகாண பாடசாலைகளின் நிலத்தள வரை படங்களை எடுப்பதற்கு நில அளவைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது Google Map மூலமும் பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பாக நிலஅளவையாளர் நாயகத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பாடசாலைகள் தரமுயர்த்தல்

- **மன்/புத்தளம் ஆப்தீன் அ.மு.க. பாடசாலை – தரம் 10 ஆரம்பித்தல் தொடர்பாக**

  இடம்பெயர்ந்து புத்தளத்தில் இயங்கும் முஸ்லிம் பாடசாலைகள் 2015 ஆம் ஆண்டு இறுதியில் மீண்டும் வடக்கு மாகாணத்திற்கு வரவேண்டியுள்ளதால் தற்போது எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

- **யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தில் உயர்தரப் பிரிவை ஆரம்பித்தல்.**

  மாகாணக் கல்விப் பணிப்பாளர்,வலயக் கல்விப் பணிப்பாளர் நேரில் சென்று பெற்றோருடன் கலந்துரையாடி இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும்.

- **யா/அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலையை தரம் உயர்த்தல்**

  யா/அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலையை தரம் உயர்த்த அனுமதி வழங்கப்படுகின்றது.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் நன்றியுடன் கூட்டம் முற்பகல் 11.45 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.

இ.இரவீந்திரன்
செயலாளர்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்